**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220606

**எண்ணெய் சிந்துதல்களுக்கு இலங்கை பதிலளிப்பதற்கு உதவுவதற்காக செயலமர்வினை ஒழுங்கு செய்யும் அமெரிக்கா**

ஜூன் 6 ஆம் தேதி, இலங்கை கடற்படை, இலங்கை கடலோரக் காவற்படை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அனர்த்த பதிலளிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஏனைய பன்னிரெண்டு இலங்கை முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, அமெரிக்க நிதியிடலுடன் கூடிய எண்ணெய் சிந்துதல்களின்போதான பதிலளிப்பு செயலமர்வு மற்றும் பயிற்சியினை அமெரிக்கா ஆரம்பித்தது.

இந்த ஐந்து நாள் செயலமர்வானது எண்ணெய் சிந்துதல்கள் மற்றும் ஏனைய கடல்சார் விபத்துக்களுக்குப் பதிலளிக்கும் இலங்கையின் திறனை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கடலில் ஏற்படும் அனர்த்தங்களுக்கு விரைவாகவும் செயற்திறனுடனும் எவ்வாறு பதிலளிப்பது, எண்ணெய் சிந்துதல்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை அளவிடுவது மற்றும் குறைப்பது எவ்வாறு, மற்றும் அனர்த்த பதிலளிப்பு நடவடிக்கைகளின் போது முதலில் பதிலளிப்பவர்களை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது போன்ற பயிற்சிகளை இது உள்ளடக்கியிருக்கும்.

“நேற்று நாம் உலக சுற்றாடல் தினத்தை கொண்டாடினோம். இலங்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பிற்கு இச்செயலமர்வு ஒரு எடுத்துக்காட்டாகும். அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்தில் உள்ள எமது இலங்கைப் பங்காளர்களுடன் நெருக்கமாகச் செயற்படுவதன் மூலம், கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளைத் தூய்மையாகப் பேணுவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் திறன்களை உள்ளூர் நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் இலங்கையின் அனர்த்த பதிலளிப்பு மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திறனைப் பலப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.” என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார்.

இச்செயலமர்வானது, இலங்கை வரலாற்றில் மிக மோசமான சுற்றுச்சூழல் அனர்த்தங்களில் ஒன்றான மே 2021 இல் இடம்பெற்ற X-Press Pearl தீவிபத்திற்குப் பதிலளிக்கும் வகையில் அமெரிக்க நிதியிடலுடன் ஏற்பாடு செய்யப்பட்ட முந்தைய பயிற்சிக்கு மேலதிகமாக ஒழுங்கு செய்யப்பட்டதாகும். எண்ணெய் சிந்துதல்களுக்கான பதிலளிப்பென்பது அமெரிக்காவின் Indo-Pacific Command இன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றுமொரு பிரிவாகும். அப்பிரிவே இச்செயலமர்விற்கான நிதியிடலினை வழங்குகிறது. ஏனைய நிபுணத்துவப் பகுதிகளானது சட்டவிரோத மீன்பிடியினைக் குறைத்தல், கடலோரப் பிராந்திய முகாமைத்துவம் மற்றும் உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.